சமத்துவச் சமுதாயத்தை நோக்கிய

# நமது பயணத்துக்குத் துணையாக வரும் போற்றுதலுக்குரியவர்கள்!

**மல்லசமுத்திரம் பெரியவர் கணேசன் – வழக்கறிஞர் அன்பழகனுக்கு**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!**









நாமக்கல், நவ.27-

நாமக்கல் மாவட்டம் – மல்லசமுத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட 'ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி அரிசன் காலனி' எனும் பெயரினை 'ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, மல்லசமுத்திரம் கிழக்கு' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பது அவ்வூர் மக்களின் கோரிக்கையாக இருந்தது.

இந்நிலையில் 'ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, மல்லசமுத்திரம் கிழக்கு' எனப் பெயர் மாற்றம் செய்வதற்கான அரசாணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மல்லசமுத்திரம் கிராமத்திற்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரடியாகச் சென்று 'அரிசன் காலனி' எனும் பெயரினை அழித்து, அரசாணையை பள்ளியின் தலைமையாசிரியரிடம் வழங்கினார்.

இதற்காகப் போராடி வந்த ஊர் பெரியவர் கணேசன் அவர்களுக்கும், ஊர் மக்களின் கோரிக்கையை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற வழக்கறிஞர் அன்பழகன் அவர்களுக்கும் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்வு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு :-

**சமத்துவச் சமுதாயத்தை நோக்கிய நமது பயணத்துக்குத் துணையாக வரும் பெரியவர் கணேசன் - வழக்கறிஞர் அன்பழகன் போன்றோர் போற்றுதலுக்குரியவர்கள்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

# திராவிடர் இயக்கக் காவல் அரணாக மிளிருவார்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாழ்த்து!

சென்னை, நவ.27-

களங்களை கழகக் கொள்கைத் தளங்களாக்கி முழக்கமிடும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "திராவிடர் இயக்கக் காவல் அரணாக மிளிருவார்" என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்து அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்து அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு தி.மு.க. அரசின் துணை முதலமைச்சரும், தி.மு.க.வின் ஆற்றல்மிகு இளைஞரணி செயலாளரும், சீரிய பகுத்தறிவாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாளை (27.11.2024) 47 ஆவது ஆண்டு பிறந்த நாள் விழாவாகும்.

### புத்தாக்க உலகை உருவாக்குவதற்கே!

அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்கள் சொல்வதுபோல், பிறந்த நாளை பகுத்தறிவாளர்களும், திராவிடர் இயக்கத்தவர்களும் கொண்டாடுவது என்பது வெறும் கொண்டாட்டத்திற்காக அல்ல. மாறாக, கொண்ட கொள்கை, லட்சியங்களைப் பரப்ப, பாதுகாக்க, அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்த்து, மேலும் மேலும் உழைத்து, புதியதோர் சுயமரியாதை, பகுத்தறிவு, சமூகநீதி



பொங்கும் புத்தாக்க உலகை உருவாக்குவதற்கே!

### 'திராவிட மாடல்' ஆட்சிக்குப் பெருமை சேர்க்கிறார் நாளும்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் - இயக்க இளைஞரணி செயலாளர் பொறுப்பானாலும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரான நிலையிலும், தேர்தல் பிரச்சாரத்திலும், சீரிய திராவிடர் இயக்கக் கொள்கைப் பிரச்சாரத்திலும் - தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, நூற்றாண்டு நாயகர் கலைஞர் ஆகியவர்களின் பாடங்களை சிறப்பாகப் பரப்புரை செய்து, இன்றைய முதலமைச்சரின் தலைமையில் கட்டுப்பாடு காத்து செயல்படும் ஓர் இராணுவத் தளபதி போன்று, கொள்கை முழக்கத்தை அஞ்சாமையும், அடக்கமும் கலந்து பரப்புரை செய்வதில் எடுத்துக்காட்டான வகையில், இன எதிரிகளும், அரசியல் வைரிகளும் அச்சப்படும் அளவில் 'பளீர் பதில்கள்' மூலம் முத்திரைப் பதித்து, 'திராவிட மாடல்' ஆட்சிக்குப் பெருமை சேர்க்கிறார் நாளும்!

களங்களை கழகக் கொள்கைத் தளங்களாக்கி முழக்கமிடுவதிலும், விவேகமும், வேகமும் உடையவராகி, மூத்தவர்களின் வாழ்த்தையும், இளையவர்களின் பாசத்தையும் நாளும் பெற்று, ஒரு புதுத் திருப்பத்தை தி.மு.க.வுக்குத் தந்து வருகிறார்.

### கொள்கைத் தெளிவு, துணிவு, பணிவு, கனிவு!

அவர் நல்ல உடல்நலத்தோடு பல்லாண்டு வாழ்ந்து, திராவிடர் இயக்கக் காவல் அரணாக மிளிருவார் என்ற நல்ல நம்பிக்கையுடன், நாம் நெஞ்சார வாழ்த்தி மகிழ்கிறோம்!

"விமர்சகர்களுக்கு எனது செயல்களே பதிலாக இருக்கும்" என்ற அடக்கமும், ஆழமும் நிறைந்த அவரது பதில் ஒன்றே அவரது கொள்கைத் தெளிவு, துணிவு, பணிவுக்கும், கனிவுக்கும் தக்கச் சான்றுகளாகும்!

"திராவிடம் வெல்லும் - என்றும் வரலாறு அதனைச் சொல்லும்!"

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி நேற்று (26.11.2024) வடசென்னை மிக உய்ய அனல் மின் திட்டம் நிலை – 3ல் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், இயக்குநர் (திட்டம்) கருக்குவேல் ராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# திராவிடத்தின் மலர்ச்சியே பல்லாண்டு வாழ்க!



**உதயநிதி ஸ்டாலினே**
**தென்னிந்திய**
**நல உரிமைச் சங்கத்தின்**
**தராசு - நீ !**

**ஒரு தட்டில் தாத்தா**
**ஒரு தட்டில் அப்பா**
**சரியாக நிற்கும்**
**தராசு முள் -- நீ !**

**எண்ணைச் சுற்றாமல்**
**தமிழ்**
**மண்ணைச்சுற்றும்**
**கடிகார முள் - நீ !**

**திராவிடர் கழகத்தின்**
**நான்காம் தலைமுறை**
**குடியரசுப் பதிப்பு - நீ !**

**பெரியாரிடம்**
**வசிப்பவன் - நீ !**
**அறிஞர் அண்ணாவை**
**சுவாசிப்பவன் - நீ !**

**மானின் கூச்சம்**
**புலியின் பாய்ச்சல்**
**அணுகுவோரைப் பொறுத்து**
**இரண்டுமாய் இருப்பாய் - நீ !**

**சி.ஏ.ஏ. சட்டத்திற்கு எதிராக**
**போரில் குதித்தாய்..!**
**நீட் தேர்வுக்கு எதிராக**
**தீயாய் கொதித்தாய் !**

**மதவெறியர்கள்**
**உன் தலைக்கு**
**விலை சொன்னபோதும்**
**ஆதிக்கத்தை**
**சிதைத்தவனே !**

**சாதி வெறியை**
**வெடிபோட்டு**
**கிழித்தவனே !**

**கலைஞரிடம்**
**எழுதுகோலை எடுத்தவனே !**
**துணை முதலமைச்சராகி**
**அந்த எழுதுகோல்**
**பிடித்தவனே !**

**நீ ஒரு சொல் வீசினால்**
**திராவகம் அவர்களுக்கு !**
**ஆனால்**
**திராட்சைச் சாறு**
**திராவிடருக்கு !**

**யாரைப் போலவும் இல்லை**
**நீயாகவே**
**இருக்கிறாய் நீ !**
**விழுந்து கிடக்கும்**
**நிலா நிழல் அல்ல**
**அறிவியல் கலந்த**
**அரசியல் நீ !**

**இட ஒதுக்கீட்டை**
**காப்பாற்றவே**
**உன் தொடர் வண்டி ஓடும் !**

**பெண் உரிமைக்கு எதிராக**
**பறக்கும் கொசுக்கள்**
**உன் மூலிகைப் புகைபட்டு**
**ஓடும் !**

**உழைப்பில்**
**காவிரி - நீ !**
**வியப்பில்**
**கல்லணை - நீ !**

**சாலைகளில்**
**அண்ணா சாலை**
**நீ !**
**நூல்களில்**
**நெஞ்சுக்கு நீதி**
**நீ !**

**மறம் கொடுப்பதில்**
**அம்பேத்கர் மொழி !**
**அறம் கொடுப்பதில்**
**அறிஞர் அண்ணா வழி !**

**உன் இளைஞர் படையில்**
**அயோத்தி தாச பண்டிதர்**
**டாக்டர். சி. நடேசனார்**
**சர். பிட்டி. தியாகராயர்**
**டி. எம். நாயர்**
**களத்தில் இருக்கிறார்கள் !**
**உன்னைக் குறி வைத்து**
**அம்பு வீசியவர்கள்**
**தோற்கிறார்கள் !**

**நீ கோபாலபுரத்தின்**
**அடிக்கல் !**
**முன்னேறும் இளைஞர்களுக்கு**
**படிக்கல் !**

**உன் மீது வீசினார்கள்**
**விமர்சனக்கல் !**
**அவைகளை நொறுக்க**
**நீ தூக்கியது செங்கல் !**

**உன் நடமாடும் நூலகத்தை**
**புகழ்கிறது திருவல்லிக்கேணி !**
**நீ அள்ளிக் கொடுப்பதில்**
**வியக்கிறது திருஅல்லிக்கேணி !**
**எளியவர்களின்**
**கழிவறையில்**
**உன் கால்கள் பட்டது !**
**சிவப்பு கம்பளம்**
**உன் கால்களை**
**முத்தமிட்டது !**

**மழை கொட்டியது**
**நள்ளிரவு !**
**குடை எடுப்பதற்குள்**
**உன் வரவு !**

**கலை உலகில்**
**தாத்தா அப்பா போல**
**வெல்லுகிறாய் !**
**பன்றி வளர்க்கும் கதாபாத்திரத்தில்**
**நடித்து சமூக நீதி அரசியல்**
**சொல்லுகிறாய் !**

**சாதி மதம் சாஸ்திரம் அதிகாரம்**
**அனைத்துக்கும்**
**எதிரானது உன் தடம் !**

**எப்போதும்**
**பண்பில் நீ**
**பள்ளிக்கூடம் !**

**இளைஞனே இவன்**
**நெய்த துணியைத்**
**தரி !**
**இவன் ஒருவனே**
**சுயமரியாதைத்**
**தறி !**

**ஆணையிடும்**
**இவன் விரல் நுனி !**
**வரலாறு படைக்கும்**
**இளைஞர் அணி !**

**மனுதர்மத்தை மறுத்து**
**சம தர்மத்தை**
**சொல்லுகிறார் ஒப்புவி !**
**சக்கர வியூகத்தை**
**வெல்லுகிறார்**
**சொல்லுது பார் இப்புவி !**

**இவன் 100 கலைஞர் என்று**
**உன் குரலை உள்வாங்கி**
**வெளிப்படுத்தும் போது**
**சொல்லுகிறது ஒலிவாங்கி !**

**இனி நூற்றாண்டுகளை**
**கடந்தும் இனம் காக்க**
**நீதானே தமிழ்த் தாங்கி !**

**பேச்சில் மணிப்புறா**
**சிறகே !**
**சிரிப்பில் செங்காந்தள்**
**அழகே !**

**தலை வணங்காத**
**பனைகளின் வனப்பே !**
**நடந்தால்**
**வெண் புலியின் அணிவகுப்பே !**

**இலட்சம் பறவைகளுக்கும்**
**திசையை தீர்மானிக்கிறாய்**
**ஆகாயத்தில் !**

**இந்தி தெரியாது போடா**
**என்று பனியன் போட்டு**
**உயர்ந்தாய் தமிழ் வானத்தில் !**

**கொள்கையில்**
**உதயநிதி ஸ்டாலின்**
**முழுப்பரிதி !**
**அவர் தம்பிகள்**
**சூரியனின் உதிரி !**

**சமூகப் பணிகளில்**
**விடுதலை நீ !**
**இந்தியை எதிர்ப்பதில்**
**முரசொலி நீ !**

**நட்சத்திரங்களுக்கு**
**தலைமை தாங்கும்**
**ஒரே நிலா நீ !**

**நூறாண்டுகள் கடந்தும்**
**நலமுடன்**
**வாழ்வாய் நீ !**



கவிஞர் **ஈரோடு இறைவன்**
கழக இலக்கிய அணி இணைச் செயலாளர்